# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கோவிட் 19 தடுப்பு நடவடிக்கைகளுக்காக பரீட்சை நிலையத்தினுள் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகள்.

01 பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படும் பரீட்சார்த்திகள் எண்ணிக்கையானது, மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படும் மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் ஒரு பகுதி அல்லது பரீட்சார்த்திகளுக்கிடையில் ஒரு மீட்டர் இடைவெளியாக இருத்தல் வேண்டும்.

02 பரீட்சை நிலையத்தில் பரீட்சார்த்திகளும் கடமைப்புரியும் உத்தியோகத்தர்களும் முகக்கவசம் அணிவது அத்தியாவசியமானது.

03 உடல் வெப்பநிலை அளவிட்ட பின்னர் பரீட்சை நிலையத்தினுள் அனுமதிக்கப்படல் வேண்டும். வெப்பநிலை $37^{o}C$ அதிகமானால் 15 நிமிட இடைவெளியில் மீண்டும் வெப்பநிலை அளவிடப்பட வேண்டும். இதில் $37^{o}C$ க்கு அதிகமானால் வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும்.

04 கைகளை கழுவிக்கொள்ள போதுமான அளவு தண்ணீர், சவர்க்காரம் விநியோகிக்கப்பட வேண்டும். கால்களால் இயக்கப்படும் தண்ணீர் குழாய்கள் இருப்பின் சிறந்தது.

05 கைகளை துடைத்துக்கொள்ள டிசு கடதாசிகளை வைக்க வேண்டியதோடு அவற்றை உபயோகித்தபின் அகற்றுவதற்கு மூடிய குப்பைக் கூடை காணப்பட வேண்டும்.

06 பரீட்சை நிலையத்தினுள் கைகளை சுத்தம் செய்துகொள்ள 70% எல்கஹோல் அடங்கிய Sanitizer வைக்கப்பட வேண்டும்.

07 பரீட்சை மண்டபத்தில் 1 மீற்றர் இடைவெளியில் ஆசனங்கள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

08 காய்ச்சல், தடிமல், இருமல், தொண்டைவலி இவை இருப்பின் பரீட்சார்த்திகளை மண்டபத்திற்குள் அனுமதிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். வைத்திய ஆலோசனையைப் பெறல் வேண்டும்.

09 கையொப்ப பத்திரத்தில் கையொப்பமிடமுன் Hand Sanitizer ஐ உபயோகிக்கவும்.

10 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குரிய அவசியமான உபகரணங்களை மாத்திரமே மண்டபத்திற்குள் கொண்டுவர வேண்டும்.

11 வினாப்பத்திரங்கள் விநியோகிக்கும்போதும் விடைத்தாள்களை சேகரிக்கும்போதும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கையுறைகளை அணிந்திருத்தல் அவசியம்.

12 பரீட்சார்த்திகளுக்கிடையில் எவ்வித உபகரணங்களும் (பேனை, பென்சில், இரேசர், கணிப்பான் போன்றவை) கைமாற்றிக்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

13 பரீட்சை ஆரம்பமாகும் முன்னரும், பரீட்சை முடிந்த பின்னரும் மாணவர்கள் கூடியிருத்தல் தவிர்க்கப்பட வேண்டும். பரீட்சை முடிவடைந்த பின்னர் மாணவர்கள் உடனடியாக மண்டபத்திலிருந்து வெளியேற வேண்டும்.

14 பரீட்சை முடிவடைந்தபின்னர் கதிரைகள், மேசைகள் போன்றவை சவர்க்கார திரவம் அல்லது 0.1% சோடியம் ஐபோகுளோரைட் திரவத்தினால் கிருமியகற்றப்படல் வேண்டும்.

15 விடைப்பத்திரங்கள் யாவும் 48 மணித்தியாலங்கள் வைத்திருக்கப்பட்ட பின்னரே மதிப்பீட்டிற்கு வழங்கப்படல் வேண்டும்.

16 செய்முறை பரீட்சைகளுக்கும் மேலே கூறப்பட்ட விதிமுறைகளையே பின்பற்றவும்.

பொது சுகாதார பிரிவு
சுகாதார நிலையம்
பேராதனைப் பல்கலைக்கழகம்